12.08.2025.

C.C.58/2024

ம.சா.1 . ரமேஷ், த/பெ.செல்வராஜ்,

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் தாக்கல் செய்துள்ள வழக்கு காசோலை மோசடி வழக்கா என்றால் ஆன்லைன் டிரேன்சேஷன் (Standing instruction) எந்த தேதியில் ஆன்லைன் டிரேன்சேஷன் மூலமாக (Standing instruction) கொடுக்கப்பட்டது என்றால் 05.06.2024 ஆகும். அதை டிரேன்சேஷன் கடன் என்றும் சொல்லலாம் என்றால் சரிதான். 05.08.2021ம் தேதி முதல் 05.06.2024ம் தேதி வரை கடன் தொகை அனைத்தையும் செலுத்தியுள்ளதாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் இல்லை. ரூ.11,621/- மாத தவணையாக எதிரி செலுத்தவில்லை என்பதற்காகதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதிக்கான தவணை செலுத்தவில்லை என்பதற்காக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஜூன் 2024. மேற்படி ஜூன் 2024ம் தேதிக்கு முன்னர் செலுத்தவேண்டிய தவணைகளை சரியாக செலுத்தியுள்ளாரா என்ற விவரம் எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ஜூன் 2024ம் தேதிக்கு முன்னர் செலுத்தவேண்டிய பாக்கி தவணைகள் ஏதும் இருப்பதாக எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் பாக்கி உள்ளது ஆனால் புகாரில் சொல்லவில்லை. 05.08.2021ல் இருந்து நான் எந்தவிதமான கடன் தவணை செய்யவில்லை என்றால் செலுத்தியுள்ளார். சில தவணைகள் செலுத்தவில்லை. இந்த விவரத்தினை எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ம.சா.ஆ.2 வங்கியால் எதிரிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பில் எதிரி செலுத்தவேண்டிய நிலுவை தொகை எவ்வளவு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ரூ.3, 29,309/- ஆகும். ஆனால் புகாரில் எதிரி செலுத்தவேண்டிய பாக்கி நிலுவை தொகை எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்படவில்லை. மின்னனு பரிமாற்றத்தின்மூலமாக பரிமாற்றம் செய்து போதிய பணம் இல்லையென்று திருப்பியதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிரியிடம் அவரது வங்கி கணக்கில் இருந்து ஆட்டோ டிடெக்ஷன் மூலமாக பணம் பெற்றுக்கொள்ள அனுமதி கடிதம் ஏதும் பெறப்பட்டுள்ளதா என்றால் பெறப்பட்டுள்ளது.

05.06.2024 தேதிக்கு முன்பாகவோ கடன் பெற்ற தேதி முதல் எதிரி கடன் தவணையை செலுத்த தவறிய விவரத்தினை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு முதிர்ச்சியடையாத மற்றும் காலவரை சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரி வங்கியில் பணம் பரிமாற்றம் செய்ததற்கான எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எதிரி எந்தவொரு தனிநபர் கடனும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. 05.08.2021 தேதி முதல் 05.06.2024ம் தேதி வரை இடைப்பட்ட காலத்தில் எதிரி கடன் தவணை செலுத்தாதற்காக அறிவிப்பு ஏதும் அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பு ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் வங்கி எதிரியின் கடனை வரா கடன் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எந்த ஆண்டு வராக்கடன் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது என்றால் 2024ம் ஆண்டு வைக்கப்பட்டது. நான் சொல்வதுபோல் எதிரி எந்தவொரு எலெக்ரானிக் பண்ட் டிரேன்சேஷன் செய்யவில்லை என்றாலும் எதிரி வழக்கில் குற்றவாளி இல்லையென்று சொன்னாலும் சரியல்ல. புகாரில் சொல்லப்பட்ட எதிரியின் வங்கி கணக்கை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.